


முன்னாள் ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட தி.மு.க. பொறுப்பாளராக பணியாற்றிய கழக முன்னோடி சவுந்தரபாண்டியன் அவர்களின் 95வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி நயினார் விலை மேற்கு பகுதியில் உள்ள அவரது இல்லத்திற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் சென்று வாழ்த்துத் தெரிவித்து கௌரவித்தார். நிகழ்வில் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், வட்டச் செயலாளர் ரவி இளங்கோ, மாமன்ற உறுப்பினர் மரிய கீதா மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவின் ஒரு பகுதியாக மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி சம்மட்டிபுரம் பகுதி 65 மற்றும் 70வது வார்டுக்குட்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் பகுதி செயலாளர் தவமணி, மாநில அணி நிர்வாகிகள் கணேசன், மதுரை பாலா, வட்டக்கழகச் செயலாளர்கள் பைப்பாஸ் பால சிவக்குமார், பாலாஜி, பகுதிச் செயலாளர் மதிவெங்கடேஷ், மாமன்ற உறுப்பினர்கள் சோலை செந்தில், மூவேந்திரன், நாகநாதன், கழக நிர்வாகிகள் ராஜகோடி, ஜே.கருப்பு, ஜே.மரியா, இளைஞர் அணி ஐயப்பன், வெற்றிச்செல்வன், தகவல் தொழில் நுட்ப அணி அம்சத்ராணி, தலைமைக்கழக பேச்சாளர் போடி காமராஜ் உள்ளிட்ட கழகத்தினர் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### தூத்துக்குடி மாவட்டம் – எட்டையாபுரம் வட்டம் – கருப்பூர் கிராமத்தில்

# தனியார் பட்டாசு ஆலையில் வெடி விபத்து - ஒருவர் பலி!

## உயிரிழந்தவர் குடும்பத்திற்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி!

சென்னை, ஆக. 31-

தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் வட்டம், கருப்பூர் கிராமத்தில் உள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் வட்டம், கருப்பூர் கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலைக்கு அருகில் உள்ள தரிசு நிலத்தில் 29.08.2025 அன்று மாலை 03.00 மணியளவில் எதிர்பாராதவிதமாக தீ பிடித்து, பட்டாசு ஆலைக்குச் சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பணியாளர்கள் தங்குமிடம் மற்றும் அருகில் உள்ள இடங்களுக்கு தீ பரவியதில் ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், விஸ்வநத்தம் கிராமத்தைச் சேர்ந்த திரு.கந்தசாமி (வயது 57) த/பெ.பெரிய வேலுசாமி என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்

# இந்தியக் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு உடல்நிலை!

## குடும்பத்தினரிடம் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்!

சென்னை, ஆக.31-

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு அவர்களின் உடல்நிலை குறித்து அவரது குடும்பத்தினர் மற்றும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**தகைசால் தமிழர் தோழர் நல்லகண்ணு அய்யா அவர்களது உடல் நலன் குறித்து மருத்துவர்கள், அவரது குடும்பத்தினர் மற்றும் தோழர் முத்தரசன் உள்ளிட்ட தோழர்களிடமும் நேரில் கேட்டறிந்தேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கூடுவாம்பூண்டியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் உள்ளார்.

### தமிழ்நாடு முதலமைச்சரின் கனவை நனவாக்கும் வகையில்

# கோவை மாநகரத்தில் "மாஸ் கிளீனிங்" பணி!

## ஒரே நேரத்தில் 50க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் பங்கேற்பு!

கோவை, ஆக. 31-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் கோவை மாநகராட்சி பொது சுகாதார குழு தலைவர் பெ.மாரிசெல்வன் தலைமையில் காந்திபுரம் வெளியூர் பேருந்து நிலையத்தில் 50 க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் ஒரே நேரத்தில் "மாஸ் கிளீனிங்" பணியில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் கோவை மாநகராட்சியை குப்பையில்லா மாநகராட்சியாக உருவாக்க திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது என்று கோவை மாநகராட்சி பொது சுகாதார குழு தலைவர் பெ.மாரி செல்வன் செய்தியாளர்களிடம் கூறினார்.

அவர் கூறியதாவது : கோவை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் சுகாதாரத்தை பேணும் வகையில், தூய்மை பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சி பகுதிகளில் குப்பையில்லா மாநகராட்சியாக மாற்ற தினமும் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றது. இது தவிர ஒவ்வொரு பகுதியிலும் "மாஸ் கிளீனிங்" என்ற முறையில் அதிகளவிலான தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மைப்படுத்தப் படுகின்றது.


இந்நிலையில் கோவை காந்திபுரம் வெளியூர் பேருந்து நிலையம் மற்றும் டவுன் பேருந்து நிலை யத்தில் தினமும் பல லட்சக்கணக்கான பயணிகள் பயன்படுத்தி வரும் நிலையில் 26.08.2025 செவ்வாய்க்கிழமை அன்று இரவு மாநகராட்சி சுகாதாரக்குழு தலைவர் ஆகிய எனது தலைமையில், காந்திபுரம் பேருந்து நிலையத்தில் "மாஸ் கிளீனிங்" பணியில் 50க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் ஈடுபட்டனர். பேருந்து நிலைய பகுதி முழுவதும் தண்ணீரில் பீச்சி அடிக்கப்பட்டும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு தூய்மைப் படுத்தப்பட்டது.

இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கும் திட்டங்களை தந்து தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், தளபதி அவர்களின் கனவை நினை வாக்கும் வகையில் கோவை மாநகராட்சியை குப்பையில்லா மாநகராட்சியாகவும், தூய்மையான மாநகராட்சியாகவும் உருவாக்கி வருகின்றோம், இப்பணி எப்போதும் தொடரும் என்று கூறினார்.

இதில் மாமன்ற உறுப்பினர் வித்யா இராமநாதன், மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.பூபதி, சுகாதார ஆய்வாளர் குணசேகரன், வட்டச்செயலாளர் இராமநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி
### ஆகஸ்ட் 31 (2012)



தென்பாண்டிச் சீமையில் கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கமுதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

கமுதி ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும், கழகத்தின் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். 'மிசா'வில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

"அனைவரிடமும் அன்பு காட்டி, அயராது உழைத்து கழகத்தை வளர்த்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### கொரடாச்சேரி தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர்

# பரசு என்கிற பரசுராமன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



திருவாரூர், ஆக.31-

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி தெற்கு ஒன்றியக் கழக துணைச் செயலாளர் கழக செயல் மறவர் பரசு என்கிற கே.பரசுராமன் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த கே.பரசுராமன், கொரடாச்சேரி ஒன்றியக்குழு முன்னாள் உறுப்பினரும், கொரடாச்சேரி தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணியின் சமூகவலைதள ஒருங்கிணைப்பாளர் ப.மணிகண்டனின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் மறைவு தகவல் அறிந்த மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள் உள்ளிட்டோரும், கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும், இரங்கலையும் தெரிவித்துள்ளனர்.

மறைந்த கே.பரசுராமன் அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று (30.08.2025) மாலை அவரது சொந்த ஊரான அம்மையப்பனில் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.வி.எம்.அ. பொன்மொழி
### ஆகஸ்ட் 31 (2017)



பள்ளிப்பருவமாகிய 1965–ல் தான் பயின்ற பள்ளி மாணவர்களை ஒன்று திரட்டி, இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தியவர்.

ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி முதல் அமைப்பாளர், மாவட்ட மாநாட்டு தொண்டர் படைத் தலைவர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட அவைத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி தலைவராகவும், கலைஞர் பட்டுக் கூட்டுறவு சங்க இயக்குநராகவும், திருவள்ளூர் பட்டுக் கூட்டுறவு சங்க தலைவராகவும் பொறுப்பேற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"இவரின் நலப்பணிகள் என்றென்றும் மக்கள் மனதில் வீற்றிருக்கும். அவர் விட்டுச் சென்ற கழக பணிகள் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொண்டரின் உள்ளத்திலும் குடியிருக்கும்" என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.